
மதுரமுரளி
Registered as Newspaper in India
Registrar of Newspapers for India    Regd. No. TN / Chief PMG / 156 / 2002
R. No. 62828 / 95    Licensed to Post without prepayment WPP No. 52 / 2002
வேணு : 7 | மார்ச் 2002 | கானம் : 8





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 7 | மார்ச் 2002 | கானம் : 8





ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீபாத ஸ்ரீராம கனபாடிகளுக்கு வேத புருஷ:
என்ற பட்டத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்தார்கள்

ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயில்
மஹா ஸம்ப்ரோக்ஷணம் ( 17 - 02 - 2002 )





மதுரபுரி க்ஷேத்ரம், மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு







மூலவர் - ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸப் பெருமாள்



உத்ஸவர் - பக்தகுதூஹலன்







ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 7 மார்ச் 2002 கானம் : 8

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 76 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 57 | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 47 | 11 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 11 | 15 |
| 7. | உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 4 | 17 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 51 | 20 |
| 9. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 7 (தொடர்ச்சி) | 22 |
| 10. | தீர்க்க ஆலோசனை | 26 |
| 11. | மறக்க முடியாத நாள் | 28 |
| 12. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 78 | 30 |
| 12. | செய்திகள் | 32 |
| 13. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |

# ஸ்ரீஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கமாஸ் தாளம் - ஆதி

*பல்லவி*

***ஆகச்ச ஸ்வயமேவ மம ஹ்ருதயே ।***
***மாகச்ச க்ஷணமபி ஶ்ரிய:பதே ॥*** ***(ஆகச்ச)***

*அனுபல்லவி*

***ஸாதனரஹிதோऽஹம் பாவனரஹிதோऽஹம் ।***
***தவக்ருபா மாத்ரம் அவலம்பனம் ஶ்ரீ ஹரே ॥***
***(ஆகச்ச)***

*சரணம்*

***சந்த்ர ஸமான ஸுந்தரவதன***
***ஶங்க சக்ரதர ஶ்யாமளவர்ண ।***
***ஶதகோடி மன்மத ஸுந்தராகார***
***சரணரஸிக முரளீதரநுத ॥*** ***(ஆகச்ச)***

பெரிய பதவியில் இருப்பவர்களும், தனவந்தர்களும் படாடோபமாக கோவில்களுக்கு வரும்பொழுது, அங்குள்ள அதிகாரிகள் முதற்கொண்டு பூஜகர்கள் வரை அவரை விசேஷமாக கவனித்து, அன்புடனும், மரியாதையுடனும் கௌரவித்து அனுப்பி வைப்பார்கள். ஆனால், பகவான் அவர்களை திரும்பிப் பார்க்க மாட்டான். எங்கோ ஒரு மூலையில் ஒரு பக்தன் யாருக்கும் தெரியாமல் பக்தியுடன் அழுது கொண்டிருப்பான். அவன்மேல்தான் பகவானின் கடாக்ஷம் விழும்!

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

## மதுரமான நஹனீயர் 76

ஆழ்வார்களால் மங்களாஸாஸனமும், நாயன்மார்களால் பாடல் பெற்றதுமான எத்தனையோ வைணவ, சிவ க்ஷேத்ரங்கள் இன்று க்ஷீண தசையில் இருக்கும்பொழுது புதியதாக கோவில்கள் கட்டுவது தேவையில்லை என்பதுதான் நமது ஸ்வாமிகளின் அபிப்ராயம். அதுபோல், நம்முடைய மதுரபுரி ஆஶ்ரமம் அமைந்து சுமார் ஒன்பது வருடங்களாகியும் அங்கு எந்த ஒரு கோவிலும் கட்டுவதற்கு நம் ஸ்வாமிகள் இஷ்டப்படவில்லை. ஸமீபமாக, நமது மதுரபுரி ஆஶ்ரமத்தைச் சுற்றியுள்ள அநேக க்ராமங்களில் உள்ள ஹரிஜன காலனிகள் உள்பட, நமது ஸங்கத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் நாம ப்ரச்சாரம் நடைபெற்றதால் அவர்கள் அனைவரும் சேர்ந்து, மஹாமந்த்ரம் சொல்வதற்கு ஒரு இடம் (centre) தேவையானதால் தான், ஸ்ரீ ஸ்வாமிகள் ஒரு கோவிலை கட்டுவதற்குத் தீர்மானித்தார்கள்.

நம்முடைய ஆஶ்ரமம் அமைந்த வளாகத்தில் இயற்கையாகவே ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளின் ஸாந்நித்யம் உள்ளது என்று நம் ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவது உண்டு. ஆஶ்ரம நிலம் வாங்கிய புதிதில், ஒருநாள், ஸ்ரீ ஸ்வாமிகள் ஏகாந்தமாக அங்கு தங்கியிருக்கையில், எதிர்புறம் உள்ள மலையில் மிகப் பெரிய ரூபத்துடன் ஸ்ரீநிவாஸபெருமாளின் காட்சி தனக்கு ஏற்பட்டதாகக் கூறுவதுண்டு. ஆகவே, கோயில் கட்டுவது என்று தீர்மானித்தால் ஸ்ரீநிவாஸபெருமாள் கோயிலே கட்ட வேண்டும் என்று தீர்மானித்து அதன்படி வேலைகள் ஆரம்பித்து நடந்து 2002, பிப்ரவரி மாதம் 17-ந் தேதி, வஸந்த பஞ்சமி, ரேவதி நட்சத்திரத்தன்று, வைதீக ப்ரதிஷ்டையாக ப்ரதிஷ்டை செய்யப்பட்டு மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. இந்தக் கோயில் கட்டுவதற்கும், கும்பாபிஷேக

செலவுகளுக்கும் பல லட்சங்கள் ஆனாலும், நமது ஸத்ஸங்கத்தின் அன்பர்களின் உதவியாலேயே இதை பூர்த்தி செய்ய முடிந்தது. யாகசாலையிலும், வேத பாராயணத்திலும் கலந்துகொண்ட ரித்விக்குகளின் ஸம்பாவனை மற்றும் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய வஸ்திரங்களின் பொறுப்பை மும்பை ஸ்ரீமான் G.K. ராமமூர்த்தி அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

யாகசாலையின் துவக்க நாளான பிப்ரவரி 14-ந் தேதி அன்று காலை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் விஜயம் செய்தார்கள். ஸ்ரீமடத்தின் பூஜையில் இருந்த இரண்டு அழகான ஸ்ரீ க்ருஷ்ண விக்ரகங்களை நமது ஸ்வாமிகளின் பூஜைக்காக கொடுத்தார்கள். ஆஶ்ரமம் அமைந்துள்ள சூழ்நிலையைப் பார்த்து மிகவும் ஸந்தோஷித்தார்கள். வேதபாட சாலை குழந்தைகள் அனைவரையும் அனுக்ரஹித்தார்கள்.

இந்த ஸம்ப்ரோக்ஷணத்திற்கு ஆந்திர தேஶத்திலிருந்து அக்னிஹோத்ரிகள் பலரும், வேதபண்டிதர்கள் பலரும் கலந்து கொண்டதும் சிறப்பு ஆகும். அதில் ஒரு பண்டிதர் மிகவும் ஆஶ்சர்யமாக தலைகீழாக கனம் (வேதம் சொல்வதில் ஒரு முறை) சொன்னார். அதைக் கேட்டு ஸந்தோஷமடைந்த நம் ஸ்வாமிகள் அவருக்கு 'வேதபுருஷ:' என்று ஒரு தங்கக் காசில் எழுதி ஸன்மானம் செய்தார். உயர்ந்த ஒரு ஶால்வையும் அவருக்குப் போர்த்தப்பட்டது. பாகவதோத்தமர்களின் நாம ஸங்கீர்த்தனமும் தினமும் நடைபெற்றது. இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸன் என்ற திருநாமமும், உத்ஸவருக்கு பக்தகுதூஹலன் என்ற நாமகரணமும் செய்யப்பட்டது.

பிப்ரவரி 17-ந் தேதி அன்று காலை ஆயிரக்கணக்கான பக்தர்களின் முன்னிலையில் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. எல்லோருக்கும் அன்னதானம் செய்யப்பட்டது. மாலையில், உத்ஸவர் புறப்பாடு, வாண வேடிக்கைகளுடன் மிகவும் விமரிசையாக நடந்தது. இந்த பெருமாள், வரும் பக்தர்களின் மனோரதங்களை எல்லாம் நிறைவேற்றுவார் என்றும், இது பிற்காலத்தில் ஒரு பெரிய க்ஷேத்ரமாக ஆகிவிடும் என்றும், நம் ஸவாமிகள் அருளினார்கள்.

இந்த க்ஷேத்திரத்தின் பெயர் மதுரபுரி, மலை - மதுராசலம், தீர்த்தம் - மதுர புஷ்கரணி, விமானம் - கல்யாண விமானம், ஸ்தல வ்ருக்ஷம் - பலாஸம். இதற்கு அடுத்ததாக, நாங்கூர் திவ்யதேசத்தில் ஒன்றான கீழச்சாலை பெருமாள் கைங்கர்யத்தை எடுத்து நடத்த, ஸ்ரீ ஸ்வாமிகள் உத்தேஸித்துள்ளார்கள். கர்ப்பக்ருஹம் மிகவும் சிதிலமடைந்து இருப்பதால் அந்த கோயிலுக்கு மிகவும் விரைவில் ஸம்ப்ரோக்ஷணம் செய்துவிட வேண்டும் என்பதே ஸ்ரீ ஸ்வாமிகளின் நினைவாக எப்பொழுதும் இருந்து வருகின்றது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

பலர், வாழ்க்கையில் கஷ்டங்கள் வரும்பொழுதெல்லாம், ''நான் இறைவனுக்கு கோவில் கட்டினேனே! பல ஆபரணங்கள் செய்து போட்டேனே! இன்னும் பல விதங்களிலெல்லாம் தொண்டு செய்தேனே! பஜனை செய்தேனே! பாராயணம் செய்தேனே! எனக்கு ஏன் இந்த கஷ்டங்கள் வருகின்றன. மேலும், ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படவில்லையே'' என்று வருந்துவது உண்டு. முதலில், நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். இறைவனுக்கு நம்மால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அவர் நம்மிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதும் இல்லை. இப்படியெல்லாம் நினைப்பதும் ஒரு அஹங்காரத்தினுடைய வெளிப்பாடுதான். கார்ய சித்திக்காகவோ, சித்த சுத்திக்காகவோ, இறை தர்சனத்திற்காகவோ, ஆன்ம பலத்திற்காகவோதான் நாம் இறைவனுக்குத் தொண்டு செய்கிறோம். பக்தி ப்ஸ்ரத்தையோடு நாம் அதை செய்தால், அதற்கான பலன் சித்திக்கத்தான் செய்யும். அவ்வாறு சித்திக்கவில்லை என்றால் நாம் அதை முறைப்படி செய்யவில்லை என்பதுதான் உண்மை.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : உணவிற்குக் கூட வழியில்லாதவரிடமும், அன்றாடம் பல கஷ்டங்களை சந்திப்பவரிடமும் இறைவனைப் பற்றிப் பேசி ப்ரயோஜனம் இல்லை. வசதியுள்ளவர்களுக்குத்தான் பக்தி வரும் என்று சிலர் கூறுகின்றனரே! இது பற்றி தங்கள் கருத்து என்ன?*

பதில் : உண்மையில் பணக்காரர்களுக்குதான் பக்தி வருவது மிகவும் கஷ்டம் என்பது என்னுடைய அபிப்ராயம். உலக விஷயங்களைப் பொறுத்தவரையில் பணத்தினாலேயே அவனால் அனைத்தையும் ஸாதிக்க முடிகிறது. பணத்தினால் உலகத்தில் அவனுக்கு ஒரு அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்கின்றது. அந்த அந்தஸ்தும், மரியாதையுமே அவனது அஹங்காரத்தை வளர்த்துவிடும். அப்படி இருக்கிறவனுக்கு பக்தி வருவதுதான் துர்லபம் என்பது என்னுடைய அபிப்ராயம். வாஸ்தவத்தில், மஹான்கள் பலர், மிகவும் சிரம தசையிலுள்ள குடும்பங்களில் தோன்றி, பிற்காலத்தில், பல வசதிகள் அவர்களைத் தேடி வந்தபொழுதும் அவற்றைத் துறந்து ஒரு எளிய முறையிலேயே வாழ்ந்ததையும், சிரமங்களை விரும்பி ஏற்றுக் கொண்டதையும் நாம் பார்க்கின்றோம்.

*கேள்வி : பல மஹான்கள் அவர்களது முற்கால வாழ்க்கையில் விரக்தர்களாகக் காணப்பட்டு, பிற்காலத்தில் பெரிய ஆம்ரமங்கள் நிறுவிக்கொண்டு, பலதரப்பட்ட ஜனங்களுடன் மிகவும் சுலபமாக கலந்து பழகுவதைப் பார்க்கின்றோமே! இது எப்படி ஸாத்யம்?*

பதில் : ஆரம்பத்தில் வைராக்யத்துடன் ஒருவர் ஸாதனை செய்யும் பொழுது சிரமப்பட்டு வைராக்யத்தை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஸாதனையில் முன்னேற முன்னேற அவர்களுக்கு உலகின் மேலும், உலக விஷயங்களின் மேலும் ஒரு பெரும் வெறுப்பு ஏற்பட்டு, ஏகாந்தத்தில் இருக்க வேண்டுமென்று தோன்றும்; யாரையும் பார்ப்பதற்கும் பிடிக்காது. அதன் பயனாக பஹிர்முகமான இறைக்காட்சி அவர்களுக்கு ஏற்படும். அப்பொழுது

உன்மத்த நிலை போன்ற ஒரு நிலை அவர்களுக்கு ஸித்திக்கும். வெளியில் ஏற்பட்ட காட்சி அவர்களுக்கு உள்ளே ஏற்பட்டு அதுவே ஸகஜமாகிவிடும். அந்த நிலையில், அவர்களுக்கு மனித சமூகத்தின் மேல் எந்த ஒரு பாரபக்ஷமுமின்றி க்ருபையானது பொங்கிவர ஆரம்பித்துவிடும். அந்த நிலையில் அவர்கள் எல்லோருடனும் கலந்து பழகுவார்கள். இந்த அனுபவங்கள் பலருக்குப் புரியாததால், ''முன்பு இருந்ததைப் போல் அவர் இப்பொழுது இல்லை, மிகவும் மாறிவிட்டார்'' என்று விஷயம் தெரியாதவர்கள் சொல்வார்கள்.

*கேள்வி : பாகவதோத்தமர்கள் புஷ்ப மாலை அணிவதும், சந்தனம் பூசிக் கொள்வதும் எதற்கு?*

பதில் : பக்தி மார்க்கத்தில் முன்னேறிச் செல்லும்பொழுது, உடம்பில் தாங்க முடியாத ஒரு எரிச்சலும், ஒரு வேதனையும் ஏற்படும். ராமக்ருஷ்ண பரமஹம்ஸருக்கு, அவர் ஸாதனை செய்து வந்த காலத்தில் ஒரு ஸமயம் தாங்க முடியாத எரிச்சலும், வேதனையும் ஏற்பட அவரை போஷித்து வந்த மதுர்பாபு எத்தனையோ வைத்யங்களும், உபாயங்களும் செய்தும் குணப்படுத்த முடியாமல் தவித்துக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்து சேர்ந்த பைராஹி ப்ராஹ்மணி, அவருக்கு சந்தனம் பூசி, புஷ்ப மாலை அணிவித்தால் வேதனையும், எரிச்சலும் சமனமாகிவிடும் என்று கூற, அதை நம்பாமல், ஏதோ சொல்கிறாரே செய்து பார்ப்போம் என்று மதுர்பாபு செய்ய, ராமக்ருஷ்ணரது எரிச்சலும், வேதனையும் சமனமாகிவிட்டதைக் கண்டு ஆச்சரியமடைந்தார். இந்த ஸம்பவம் ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் சரித்திரத்தைப் படித்தவர்களுக்குத் தெரியும். ஆகவே, இவைகளிலெல்லாம் ஏதோ ஒரு விஷயம் உள்ளது என்பது வரை நாம் புரிந்துகொண்டால்கூட போதுமானது.

*கேள்வி : எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. எனக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?*

பதில் : உங்களைப்போல பலர் என்னிடம் வந்து, 'நான் கடவுளை நம்புவதில்லை. இதிஹாஸ - புராணங்களில், வேதத்தில், சடங்குகளில், ஸாதனைகளில் நம்பிக்கையில்லை என்றெல்லாம் கூறுவதுண்டு; இப்படிச் சொல்வதே பெருமை என்று நினைத்து சிலர் கூறுகின்றார்களா

அல்லது என்னைப் புண்படுத்துவதாக நினைத்து இப்படிச் சொல்கின்றார்களா அல்லது இப்படியெல்லாம் பேசுவதால் நான் வருத்தப்படுவேன் என்று நினைக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இப்படியெல்லாம் நீங்கள் சொல்வது என்னை சிறிதுகூட பாதிப்பதில்லை என்பதுதான் உண்மை. இவைகளை எல்லாம் கூட ரஸிக்கப் பழகிக்கொண்டு விட்டேன் நான்.

*கேள்வி : மஹான்கள் உபயோகித்த பொருள்களை ஆஶ்ரமங்களில் வைத்துள்ளனர். எனக்குத் தெரிந்த பக்தர் ஒருவர் அவரது குருநாதர் உபயோகித்த வஸ்திரத்தை அணிந்துதான் ஜபம் செய்கிறார். இதன் விசேஷம் என்ன?*

பதில் : மஹாத்மாக்கள் உபயோகித்த பொருட்களில் ஒரு ஸாந்நித்யம் ஏற்பட்டுவிடுகிறது. பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் பக்தரான எழுத்தாளர் திரு. பாலகுமாரன், நீண்ட நாட்களுக்குப் பின் அவரை தரிசிக்கச் சென்றபொழுது தனது ஜபமாலையை அவரிடம் கொடுத்து அனுக்ரஹம் செய்து தரும்படி வேண்டினார். அதை கையில் வாங்கிய பகவான் யோகி ராம்சுரத்குமாரரோ, 'நான் இதற்கு முன்பே இந்த ஜபமாலையை அனுக்ரஹம் செய்துள்ளேன் அல்லவா?' என்று கேட்க, ஆச்சரியமடைந்த பாலகுமாரன், ''பகவான்! எப்படி சரியாகச் சொன்னீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு பகவான் யோகி ராம்சுரத்குமார், ""when this begger touches something, it becomes different" என்றார். இதிலிருந்து, மஹான்கள் உபயோகித்த பொருட்களுக்கு ஒரு விசேஷ ஸாந்நித்யம் ஏற்படுகிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். மஹான்கள் உபயோகித்த வஸ்திரங்களை சிரஸில் வைத்துக்கொண்டு தியானம் செய்வது நல்ல ஆன்மீக முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

---

பகவான் எனக்கு செய்துள்ள க்ருபையை எண்ணி, அதற்குக் க்ருதஜ்ஞையாக நான் மேலும் ஜபமும், தியானமும் செய்தேன். அவ்வாறு செய்தபொழுது, அதன் பலனையும் எனக்கே அனுக்ரஹிக்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# வேத கதைகள் - 57

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## சர்யாநி சரிதம்

சர்யாநி என்று ஒரு அரசர் இருந்தார். அவர் ராஜ்யம், ராமராஜ்யம் போன்று இருந்தது. அவருக்கு ஆயிரக்கணக்கான மனைவிகள் இருந்தனர். ஆனால், ஒரு மனைவிக்குக் கூட ஸந்ததி இல்லை. பிறகு, யாகங்கள் பல புரிந்து ஒரு மனைவிக்கு மட்டும் ஒரு பெண் பிறந்தாள். அவளுக்கு ஸுகன்யா என்று பெயரிட்டனர். சர்யாநியின் நகரத்தில் ஒரு பெரிய தோட்டம் இருந்தது. அதன் ஒரு மூலையில் ச்யவனர் என்ற முனிவர் தவம் புரிந்து வந்தார். பல வருஷங்கள் கடுமையான தவம் புரிந்ததால், அவர் மேல் புற்று ஏற்பட்டது. கண் உள்ள இடத்தில் மட்டும் இரு ஓட்டைகள் இருந்தன.

ஒரு நாள் அரசன் மகள் ஸுகன்யா விளையாட தோட்டம் சென்றாள். செல்லப் பெண்ணானதால் யாவரும் அவளிடம் ரொம்ப அன்பாயிருந்தனர். பூர்ண ஸ்வதந்த்ரமாக அவள் எங்கும் செல்ல எந்தத் தடையும் அவளுக்கில்லை. அவள் விளையாடி வரும் ஸமயத்தில் ஒரு புற்றில் இரு ஓட்டைகளைக் கண்டாள். அந்த ஓட்டைகளில் பள பள என்றும் ஏதோ தெரிந்தது. அது ச்யவன முனிவரின் கண்கள். அதை அறியாமல் ஒரு முள்ளால் குத்தினாள். முள் குத்திய இடத்திலிருந்து ரத்தம் வந்தது. பயந்தவளாக யாரிடமும் சொல்லாமல் வந்துவிட்டாள்.

தவம் புரியும் முனிவருக்கு கண் கெட்டுவிட்டது. அதனால், அவருக்கு வருத்தம் ஏற்பட்டது. ஆனால், அவர் யாருக்கும் ஒரு சாபமும் கொடுக்கவில்லை. ஆனாலும், அவருக்கு வருத்தம் ஏற்பட்டதால் அரண்மனையில் யாவருக்கும் ஒரே ஸமயத்தில் மலமூத்ர பந்தம் ஏற்பட்டது. யாவரும் துன்புற்றனர். மஹான்களுக்கு துன்பம் ஏற்படுத்தினால் அவர்கள் சாபம் கொடுக்காது போனாலும், கெடுதல் உண்டாகும் என்ற உண்மை இதிலிருந்து நமக்கு புலப்படுகிறது. உடன், அரசன் முனிவருக்கு யாரோ துன்பம்

செய்திருக்கிறார்கள். அதனால்தான் யாவருக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று எண்ணி எல்லோரையும் விசாரித்தான். அப்பொழுது ஸுகன்யா, தான் செய்ததைச் சொன்னாள். அரசன் விரைவாகச் சென்று, புற்றை உடைத்து முனிவரைக் கண்டான். அவரிடம் மன்னிப்பு கேட்டான். முனிவர் தனக்கு வயதாகி விட்டதாலும், கண் கெட்டு விட்டதாலும் தன்னால் இனி தவம் செய்ய முடியாது. பணிவிடை செய்ய நபர் தேவை என்று கூறினார். அரசனிடம், ''உன் பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடு. வேறு யாரும் அன்புடன் பணிவிடை செய்ய மாட்டார்கள்'' என்று முனிவர் கூறிவிட்டார்.

வயதானவரும், கண் இல்லாதவருமான முனிவருக்கு அன்பான அழகான பெண்ணை எவ்விதம் கொடுக்க முடியும் என்று அரசன் எண்ணினான். ஆனால், யாவருக்கும் சிரமம் விலகவில்லை. இதை அறிந்த ஸுகன்யா தானாகவே முனிவரை மணம் புரிய ஒப்புக்கொண்டாள். மன்னனும் வேறு வழியில்லாததால் முனிவருக்கு தன் பெண்ணைக் கொடுத்தான். அரச தம்பதிகள் வருத்தத்துடன் அரண்மனை சென்றனர். ஸுகன்யா பக்தியுடனும், அன்புடனும் அவர் மனம் கோணாமல் நன்கு பணிவிடை புரிந்தாள்.

ஒரு ஸமயம், தேவர்களின் வைத்யர்களான அஶ்வினீ தேவர்கள் ச்யவன ஆஶ்ரமம் வந்தனர். தங்கள் சக்தியால் ஸுகன்யாவிற்கு நன்மை செய்ய, முனிவரை நல்ல அழகான இளைஞனாக மாற்றினர். அவர்கள் வேண்டுதலை ஏற்று ச்யவனர், தம் மாமனார் சர்யாதிக்கு ஒரு யாகம் செய்வித்து, அந்த யாகத்தில் ஹவிர்பாகம் அற்ற அஶ்வினீ தேவர்களுக்கும் ஹவிர்பாகம் அளித்தார். அதனால் கோபமடைந்த இந்திரன் முனிவரைக் கொல்ல முயற்சித்தான். முனிவர் தன் தவ வலிமையால் இந்த்ரனை அடக்கினார். அஶ்வினீ தேவர்களும் ஹவிர்பாகம் பெற்றனர். இந்த வரலாறு, ''யதாசார்தே அபிப: ஸுதஸ்ய'' என்ற வேதபாகத்தில் கூறப்பட்டுள்ளது.

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

# எந்தரோ மஹானுபாவுலு - 47

மஹாப்ரபுவிற்கு விதவிதமாக பூஜைகள் நடந்தன. பக்தர்களில், சிலர் தூபமேற்றினர். சிலர் தீபங்களை ஏற்றினர். சிலர், பலவிதப் பழங்களையும், விதவிதமான தின்பண்டங்களையும் நைவேத்யம் செய்தனர். விதவிதமான அழகான நேர்த்தியான வஸ்த்ரங்களால் ப்ரபுவின் ஶரீரத்தைப் போர்த்தினர். சிலர் இனிப்புகளைத் தந்தனர். ப்ரபோ, இதை உண்ணுங்கள், இதை உண்ணுங்கள் என்று போட்டி போட்டுக்கொண்டு பக்தர்கள் ''போக்'' ஸமர்ப்பித்தனர். ப்ரபு ஒன்றையும் விடாமல் வாங்கி உண்டு அனைவரையும் ஆனந்தப்படுத்தினார்! அன்று பக்தர்கள் எவ்வளவு உணவு தந்தனர், ப்ரபு எவ்வளவு உண்டார் என்பதற்கு அளவே இல்லை! ஸ்ரீவாஸ் பண்டிதர் கடைசியில் நறுமணம் மிகுந்த தாம்பூலத்தைத் தந்தார். அதையும் உண்டார் ப்ரபு! உடனே எல்லோரும் தாம்பூலம் தர, ப்ரபு அவற்றையும் ஸ்பர்சம் செய்து திரும்பித் தர, பக்தர்கள் அதை ப்ரஸாதமாக ஏற்றனர். என்ன திவ்ய காட்சி அது!

சிவந்த அதரங்களுடன் தன் ப்ரேம பூர்ண த்ருஷ்டியை அனைவர் மீதும் மஹாப்ரபு செலுத்தினார். பிறகு அன்புடன் பேசலானார். அம்ருத வசனங்களாயிருந்தது அவை. அதிகாலையிலேயே வந்து சேர்ந்த பக்தர்கள் ஸாயங்காலம் ஆகியும் உலக ஸ்மரணையே இன்றி ப்ரபுவின் ப்ரேம பாசத்தால் கட்டுண்டு அதே அறையிலேயே அமர்ந்திருந்தனர். இரவு விளக்குகளை ஸ்ரீவாஸ் பண்டிதர் ஏற்றினார். ஆனால், ப்ரபுவின் ப்ரகாசத்துக்கு முன்பு அவை ஒளியிழந்து தோன்றின.

அங்கு கூடியிருந்த பக்தர்கள் தங்கள் தங்கள் இஷ்ட தெய்வத்தை ப்ரபுவின் தோற்றத்தில் கண்டனர். முதன் முதலில், ப்ரபு ஸ்ரீவாஸ் பண்டிதருக்கு க்ருபை செய்தார். ''ஸ்ரீவாஸ்! நீ என்னுடைய க்ருபைக்கு பாத்திரமானவன்!! உனக்கு நினைவிருக்கிறதா? தேவானந்த் பண்டிதர் வீட்டில் பாகவத பாடம் கேட்கும் ஸமயம், நீ **பா**வ ஆவேசத்தில் மூர்ச்சித்து விழுந்ததும், அங்கிருந்த பண்டிதர்களோ, அவரது சிஷ்யர்களோ உன்னைப் புரிந்து கொள்ளவில்லை.

நான்தான் அறிந்துகொண்டு உன் மூர்ச்சையைத் தெளிவித்தேன்'' என்றார்.

தன் வாழ்வில் நிகழ்ந்த ரஹஸ்ய நிகழ்ச்சியை ப்ரபு வர்ணிப்பதைக் கேட்டு, ஸ்ரீவாஸ் பண்டிதர் ஆச்சர்யமடைந்தார். ப்ரபு அதற்குள், ''அத்வைதாச்சார்யரே! உங்களுக்கு ஒருநாள் பகவத் கீதையின் ஒரு ஸ்லோகத்துக்கு நானே ஒரு வ்யாக்யானம் தந்தேனே நினைவிருக்கிறதா?'' என்றார். அத்வைதாச்சார்யர் திகைத்துப் போனார். இதற்குள் பக்தர்கள் ப்ரபுவுக்கு இரவு ஆரத்தி வெகு நேர்த்தியாகச் செய்தனர். சசீமாதாவிடம் ஆரத்தியைத் தந்து, ஸ்ரீவாஸ் பண்டிதர் ப்ரபுவுக்குக் காட்டச் சொல்ல அவளும் தன் நடுங்கும் கரங்களால் ப்ரபுவுக்கு ஆரத்தி செய்தாள். அநேக வாத்யங்கள் முழங்கின. சசீமாதாவை பிறகு கவனமாக அவளது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். இனி அனைத்து பக்தர்களும் வரதானம் கேட்கும் ஸமயம் வந்தது. ப்ரபுவின் அந்தரங்க பக்தர்கள் அனைவரும் அங்கிருந்தாலும், அவரது ப்ரியத்துக்குப் பாத்திரமான ஸ்ரீதர் மட்டும் அங்கு இல்லை.

ப்ரபுவின் பால லீலைகளை வர்ணிக்கும் ஸமயம் நாம் ஸ்ரீதரைப் பற்றிப் படித்துள்ளோம். இவர் வாழைப்பூ, வாழைத்தண்டு, வாழைப் பட்டை, இலை வியாபாரம் செய்யும் பரம பக்தர். இவரை மிகவும் சீண்டி, சீண்டி, ப்ரபு இவரிடம் பாதிவிலைக்கு வாழைத்தண்டு வாங்குவார். ஸ்ரீதர் தனது சொல்ப வருமானத்தில், கங்காபூஜை, தேவபூஜை செய்து மகிழ்வார். இரவு நேரங்களில் உரக்க நாமஸங்கீர்த்தனம் செய்வார். பக்கத்துக் கடைக்காரர்கள் இவரை மிகவும் கடிந்துகொள்வார்கள். ப்ரபு இவரிடம் அன்பாக இருப்பார். ஸ்ரீதர், மஹாப்ரபுவிடம் ''இந்த கிழவனை யாரும் லக்ஷியம் செய்யமாட்டார்கள்'' என்று கூறுவார். ப்ரபுவுக்கு இவரது அந்தரங்க சுத்தி தெரியுமாதலால் இவரிடம் ஸ்நேஹம் பாராட்டுவார்.

தனது பகவத் **பா**வ நிலையில் ப்ரபு திடீரென்று ஸ்ரீதரை ஸ்மரித்துக்கொண்டு அவரை அழைத்துவரப் பணித்தார். ஸ்ரீதரின் வீடு ஊர்க்கோடியில் இருந்தது. இரவு வேளை ஆதலால், ''ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த ஹரே முராரே । ஹே நாத நாராயண வாஸுதேவ॥'' என உரக்க நாம ஸங்கீர்த்தனம் செய்து

கொண்டிருந்தார். கதவு தட்டும் ஓசை கேட்டதும் ''யாரது'' என வினவினார். பக்தர்கள் அவசரத்துடன், ஸ்ரீதர்! சீக்கிரம் கதவைத் திற'' என்றனர். கதவைத் திறந்ததும் பக்தர்களைக் கண்ட ஸ்ரீதர், வினயத்துடன் இரவு வேளையில் வந்த காரணத்தைக் கேட்டார். அவர்கள், ''ப்ரபு உன்னை ஸ்மரித்துக்கொள்கிறார். சீக்கிரம் கிளம்பு'' என்றனர். தீனமான தன்னையும் ப்ரபு ஸ்மரித்துக்கொள்கிறார் என்று கேட்டதும் அவர் ''தடால்'' என நினைவிழந்து கீழே விழுந்தார். ''இதென்னடா! வம்பாயிற்றே'' என பக்தர்கள் நினைத்து அந்த நிலையிலேயே அவரைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ப்ரபுவிடம் வந்தனர். ப்ரபு தனது கோமளமான கரங்களினால் அவரை ஸ்பர்சித்தாரோ இல்லையோ, அவருக்கு சைதன்யம் வந்தது. ஸ்ரீதருக்கு நினைவு வந்தவுடன், ப்ரபு அவரிடம், ''ஸ்ரீதரா! நீ எனது பகவத் ஸ்வரூபத்தைக் காண்! உன் மனது ஆசை இன்று பூர்ணமாயிற்று!'' என்றார்.

ஸ்ரீதர் விக்கி விக்கி அழுதார். கைகளைக் கூப்பிக்கொண்டு ''என்னைப் போன்ற தீனமான, லோகப்ரஷ்டனான அதம புருஷன், ப்ரபுவை என்னதான் ஸ்துதி செய்ய முடியும்? ப்ரபு! நான் அபராதி! உங்களது மஹிமை தெரியாமல் ஸதா உங்களிடம் வியாபாரம் செய்யும் போது சண்டைபோடுவேன்! அடிக்கடி எனக்குப் புரிய வைத்தாலும், நான் மாயையில் சிக்கி உங்களது ரஹஸ்யத்தை தெரிந்துகொள்ளவில்லை. உங்களது யதார்த்த ரூபத்தை ஸாக்ஷாத்காரம் செய்து என் அஜ்ஞானம் நீங்கியது! என் அபராதங்களை மன்னியுங்கள்!'' என்றார்.

ப்ரபு கத்கதமான குரலில், ''ஸ்ரீதர்! உன்னிடம் நான் பரம ஸந்துஷ்டமாக உள்ளேன்! உன்னிஷ்டம் போல் வரம் கேள். நித்தி, சித்தி, தனம், பதவி எது வேண்டுமோ கேள்! ம் கேள்!'' என்றார். கைகூப்பிக்கொண்டு மறுபடி ஸ்ரீதர் தழுதழுத்த குரலில், ''ப்ரபோ! உலகமே வெறுக்கும் பஞ்ஜையான என்னையும் க்ருபையுடன் கூப்பிட்டனுப்பி தேவதர்சனம் அளித்து க்ருதார்த்தனாக்கி உள்ளீர்கள்! இதைத் தவிர எனக்கு வேறென்ன வேண்டும்? நித்தி சித்திகளால் எனக்கு என்ன பயன்? அவைகளும் மாயைதானே!''

என்றார். ப்ரபு பிடிவாதமாக ''இல்லை! இல்லை! நீ ஏதாவது வரதானம் கேட்கத்தான் வேண்டும்! நித்தி, சித்தி வேண்டாம் என்றால் உனக்குப் பிரியமானதைக் கேள்'' என்றார்.

தீனமான ஸ்வரத்தில் ஸ்ரீதர் பேசலுற்றார், ''ப்ரபு! எனக்கு ஏதாவது தானம் தந்துதான் தீரவேண்டுமென்றால், எந்த ப்ராஹ்மண குமாரன் ஸதா வாழைத்தண்டு வாங்கும் ஸமயம் சண்டை இடுவானோ, அவனது சுந்தர ரூபம் என் ஹ்ருதயத்தில் எப்போதும் இருக்குமாறு செய்யுங்கள்'' என்றார்.

ஸ்ரீதரின் இந்த வைராக்யத்தைக் கண்டு ப்ரசன்னமான ப்ரபு, அவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ண தர்சனத்தை அளித்தார். தனது இஷ்ட தெய்வமான முரளி மனோஹரனைக் கண்டு பேரானந்தம் அடைந்த ஸ்ரீதர் மூர்ச்சையடைய, பக்தர்கள் அவரை தூக்கிக்கொண்டு பக்கத்து அறைக்குச் சென்றனர். அடுத்தது முராரி குப்தாவின் முறை வந்தது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

ஸகல வசதிகளும் படைத்த ஒருவனுக்கு, அனுபவிப்பதற்கு பல விஷயங்கள் வெளியில் இருந்தபோதிலும், மதுபானம் செய்து நினைவிழந்த நிலையில் பல மணி நேரங்கள் இருப்பதைக் காண்கிறோம். இது ஒன்றே வெளி விஷயங்களிலிருந்து வரும் ஆனந்தத்தைக் காட்டிலும், உள்ளிருந்து ஏற்படும் ஆனந்தமே சிறந்தது என்பதற்கு சான்றாகும்.

- **ஸ்ரீஸ்வாமிகள்**

இனிப்பை சாப்பிட்ட பிறகு காபி சாப்பிட்டால், காபியில் இனிப்பு இருந்தாலும் கூட அது எவ்வாறு கசக்குமோ, அதுபோல், பகவத்தரிசனம் என்ற பேரானந்தம் ஏற்பட்ட ஒருவனுக்கு உலக விஷயங்கள் எதுவும் ரஸிக்காது. உலக விஷயங்களை அனுபவித்துக்கொண்டே ஒருவன் பகவத் தரிசனத்தையும் அனுபவிப்பதாகச் சொன்னால், அவனது அனுபவம் பொய்யானது.

- **ஸ்ரீஸ்வாமிகள்**

# ஸனாதனப் புதிர் - பகுதி - 11

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. அர்ஜுனன் தனது ஒரே பாணத்தால் சகுனியின் ஸஹோதரருடைய புதல்வர்களை (அவர்கள் இரட்டையர்) மஹாபாரதப் போரில் கொன்றான். அந்த இரட்டையர்களுடைய பெயர்கள் என்ன?
2. துர்வாஸ முனிவரின் மனைவி யார்? அவர்கள் குழந்தைகளின் பெயர் என்ன?
3. ராஜா அம்பரீஷனுடைய ஏகாதஶீ வ்ரத மஹிமை மஹாபாரதத்தில் எங்கு சொல்லப்பட்டு இருக்கிறது?
4. அஞ்சனபர்வன் என்பவன் யார்? மஹாபாரதப் போரில் யாரால் கொல்லப்பட்டான்?
5. ஶ்வேதகேசீ என்பவர் யார்?
6. 10-வது நாள் யுத்தத்தில் கீழே சாய்ந்த பீஷ்மர் உத்தராயணம் வரை அம்புப் படுக்கையில் எத்தனை மாதங்கள் இருந்தார்? அவர் தர்மபுத்திரருக்கு கூறிய அறிவுரைகள் - தர்மங்கள் எந்த பர்வாவில் காணப்படுகின்றன?
7. ஜடிலா என்பவரைப் பற்றிய விசேஷம் என்ன? இவரைப் பற்றி மஹாபாரதத்தில் எங்கே காணப்படுகிறது?
8. நாரதரின் மனைவியின் பெயர் என்ன? இவர் யாருடைய பெண்?
9. ''விஷ்ணு'' என்ற பதம் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் எத்தனை முறை வருகிறது?
10. எட்டு விதமான புஷ்பங்களால் பகவான் விஷ்ணு திருப்தி அடைகிறார். (அஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்) அந்த எட்டுவிதமான புஷ்பங்கள் யாவை?

ஸனாதனப் புதிர் பகுதி - 11க்கான பதில்களை
மார்ச் 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

## ஸனாதனப்புதிர் - 10-க்கான பதில்கள்

1. திரிகூடம்.
2. ஹுஹு என்ற கந்தர்வன்.
3. கஜேந்திரன் என்ற யானையாக.
4. காலகூடம்.
5. விரோசனன், விந்த்யாவதி, சுக்ராச்சாரியார்.
6. ராஜா பகீரதன் கங்கையை பூலோகத்திற்கு கொண்டு வந்து தனது முன்னோர்களை கரை ஏற்றியதை.
7. ப்ராஹ்ம, பத்ம, விஷ்ணு, சிவ, லிங்க, கருட, நாரத, பாகவத, அக்னி, ஸ்கந்த, பவிஷ்ய, ப்ரஹ்மவைவர்த்த, மார்க்கண்டேய, வாமன, வராஹ, மத்ஸ்ய, கூர்ம, ப்ரஹ்மாண்ட என்ற 18 புராணங்கள்.

   ஸ்லோகங்களின் விவரங்கள் 12-ம் ஸ்கந்தம் - 13-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டு இருக்கின்றன.
8. ஸ்ரீமத் பாகவதம் - 12-வது ஸ்கந்தம் - 3-வது அத்யாயம் - 51-வது ஸ்லோகம் - கலியுகத்தில் நாமஸங்கீர்த்தனமே சாலச் சிறந்தது.
9. கந்தனா - காசிராஜாவின் மகள்.
10. சுசர்மா - துரியோதனனின் மனைவியான பானுமதியின் சகோதரன்.
11. உத்தமௌஜன்.
12. யுதிஷ்ட்டிரர் (தர்மபுத்திரர்).

---

## ஸனாதனப் புதிர் - பகுதி - 10க்கான வினாக்களுக்கு சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ.** 250/-

Hema, C/o. Rangamani, 20A, IVth Main Road, Postal Colony, Ch-33.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chennai-44.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

K.S. Subramanyam, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.

**சிறப்பு பரிசுகள் தலா ரூ.** 100/-

1. S. Gokul, C/o. C. Sowdamini, Paranoor Post, Mugaiyoor, (via) - 605 755
2. S. Shantha, 35, Patel Street, Thenpathi, Sirkazhi - 609 111

# உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் - 4

இலக்கியங்களில் கவிகள் பல ஆச்சர்யமான விஷயங்களைக் கையாளுகிறார்கள். மனிதர்களுடைய இயல்புகள் மட்டுமன்றி விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இயல்புகள் பற்றி வியக்கத்தக்க பல விஷயங்களைக் குறிப்பிடுகின்றனர். இந்த அபூர்வமான விஷயங்களை அவர்கள் எவ்வாறு அறிந்தார்கள் என்று வியப்பாக உள்ளது.

உதாரணமாக வள்ளுவர், ''மயிர் நீக்கின் உயிர் வாழா கவரிமான்போல்'' என்று குறிப்பிடுகிறார். அதாவது, கவரிமான் தன் உடலிலிருந்து ஒரு மயிர் விழுந்துவிட்டால் கூட அதை ஒரு பெரிய அவமானமாகக் கருதி தன் உயிரைத் துறந்துவிடும். இந்த ஆச்சரியமான விஷயத்தை திருவள்ளுவர் கையாண்டுள்ளார்.

அதுபோல், பல இலக்கியங்களில் ஹம்ஸ பக்ஷியின் இயல்பு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஹம்ஸ பக்ஷியானது புராண காலங்களில் இருந்ததாகவும், அது பாலையும், நீரையும் கலந்து வைத்தால், நீரை நீக்கி பாலை மட்டும் உட்கொள்ளும் திறன் படைத்தது என்றும் பல கவிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த பக்ஷியை இன்று காணக் கிடைப்பதில்லை. ஆனால், பல கவிகள், இந்த விஷயத்தைக் கூறியுள்ளனர்.

ஆதிசங்கர பகவத்பாதாள், பகவானிடம் பக்தி எப்படியிருக்க வேண்டுமென்று 'சிவானந்த லஹரியில்' கூறும்பொழுது, உதாரணங்களைச் சொல்கிறார்.

அந்த ஸ்லோகம் பின்வருமாறு.

*''அங்கோலம் நிஜபீஜஸந்ததிரய: காந்தோபலம் ஸூசிகா*
*ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து: ஸரித்வல்லபம்।*
*ப்ராப்னோதீஹ யதா ததா பஶுபதே: பாதாரவிந்தத்வயம்*
*சேதோவ்ருத்திருபேத்ய திஷ்டதி ஸதா ஸா பக்திரித்யுச்யதே ॥*

இந்த ஸ்லோகத்தில், அங்கோல வ்ருக்ஷத்தில் அதனுடைய விதைகள் எவ்வாறு சேர்கிறதோ, ஊசியானது காந்தக் கல்லையும், ஸத்பத்நியானவள் ஸத்பதியையும், கொடியானது ஆதார

வ்ருக்ஷத்தையும், நதி கடலையும் வேறு கதியில்லாமல் எவ்வாறு சேருமோ, அப்படி மனமானது பசுபதியின் பாதாரவிந்தத்தில் லயித்தால் அதுவே பக்தி என்று கூறுகிறார். இங்கே, அங்கோல வ்ருக்ஷத்தினுடைய விதைகள், கீழே விழுந்தவுடன், கூட்டமாக, அந்த வ்ருக்ஷத்தையே ஒட்டிக் கொள்கின்றன என்ற உவமையானது காட்டப்படுகிறது. இது ஒரு அபூர்வமான விஷயம். இது ப்ரஸித்தமாக அனைவருக்கும் தெரியாத ஒன்று.

வேதாந்த தேசிகன், ''மூஞ்சுரை விழுங்கிய பாம்புபோல்'' என்று ஓரிடத்தில் கூறுகிறார். பாம்பானது எலிக்கும், மூஞ்சிறுக்கும் வித்தியாசத்தை அறியாமல் மூஞ்சிறுவை விழுங்கிவிடும். அது அந்த பாம்பின் உயிருக்கே ஆபத்தாகிவிடும்.

பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், அவதார புருஷர்களைப் பற்றிக் கூறும்பொழுது, ஹோமா என்ற ஒரு பக்ஷியைப் பற்றிக் கூறுகிறார். ஹோமா பக்ஷி ஆகாயத்திலேயே தனது வாழ்நாள் முழுதும் கழிக்கும். பூமிக்கு வரவே வராது. அதுபோல், அவதார புருஷர்களும் உலகில் பல கார்யங்கள் செய்தாலும், அவர் உலக விஷயங்களில் ஒட்டாதவர்களே என்று அவர் கூறுகிறார்.

மற்றொரு கவி, யானைகளின் இயல்பு பற்றி ஒரு அதிசயமான விஷயத்தைக் குறிப்பிடுகிறார். ஆண் யானையும், பெண் யானைகளும் கூட்டம் கூட்டமாக நீர்நிலைக்கு நீர் அருந்தச் செல்லும். அந்தக் குளம் மிகப் பெரிய குளமாக இருந்தாலும், ஆண்யானைக்குத் தான் அருந்திவிட்டால், பெண்யானைகளுக்கு நீர் இல்லாமல் போய்விடுமோ என்ற ஐயத்தால் தனது தும்பிக்கையை நீரில் வைத்துக் கொண்டு, நீர் அருந்தாமல் பார்த்துக்கொண்டிருக்கும். பெண்யானைகள் நீர் அருந்திய பின்னரே ஆண் யானை நீர் உட்கொள்ளும் என்ற ஒரு அரிய விஷயத்தை ஒரு கவி கூறுகிறார்.

ஒட்டகத்தின்மேல் பெருஞ்சுமையை ஏற்றிச் செல்லும்பொழுது, ஒட்டகம் சிரமப்படுவதை கண்டவுடன், அதை ஓட்டிச் செல்பவன் அதன் மேலிருந்து ஒரு புல்லுக்கு சமமான பொருளை எடுத்துக் கீழே போடுவான். அதைப் பார்த்த ஒட்டகம் பெரும் பாரம் குறைந்து விட்டது போல் மிகவும் ஸந்தோஷப்படும்.

அதுபோல், குதிரையானது நீண்ட சவாரிக்குப் பின், தன் எஜமானன் தன்னைத் தட்டிக்கொடுத்து பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும். அவ்வாறு அவன் தட்டிக் கொடுத்தால், ஒரு விநாடியில் களைப்பு நீங்கி, மிகுந்த உத்ஸாகத்தை அடைந்து மீண்டும் நீண்ட தூரம் ஓடத் தயாராகிவிடும். இது போன்ற அரிய விஷயங்களை கவிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கம்பரும், ''மந்தரை சூழ்ச்சிப் படலத்தில்'' மயில்கள் பற்றிய ஒரு அபூர்வமான விஷயத்தைக் கூறியுள்ளார். மந்தரை, பல்வேறு உபாயங்களால் கைகேயியின் மனதை மாற்றி பரதனுக்கு அரசுரிமையை பெற்றுத் தந்து, ராமனை வனத்திற்கு அனுப்ப சூழ்ச்சி செய்தாள். கைகேயியிடம் பலவாறாக எடுத்துரைத்து, அவள் மனதை மாற்ற முயன்றாள்.

முதலில் மனம் மாறாத கைகேயி, மந்தரையிடம் சினங்கொண்டு அவளிடம், ''மயில் முறை குலத்து உரிமை'' என்று கூறுகிறாள். இதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லப்படுகிறது. அதாவது, மயிலின் குஞ்சுகளில் மூத்த குஞ்சுக்குத்தான் தோகையில் ஒரு பொன்னிறம் ஏற்படும். மற்ற குஞ்சுகளுக்கு அவ்வாறிராது. மேலும், மேகங்கள் சூழ்வதைக் கண்டவுடன், மயில் கூட்டத்தில் மூத்த மயில்தான் முதலில் தோகை விரித்தாடும். அதைத் தொடர்ந்தே இளைய மயில்கள் தத்தம் தோகையை விரிக்கும். அதுபோல், ஆதிகாலம் தொட்டு வழிவழியாக வந்த க்ஷத்ரிய தர்மப்படி, அரசுரிமை மூத்த மகனையே சேரும்.

மூத்த மகனாகிய ராமன் இருக்க, இளையவனான பரதன் அரசுரிமை ஏற்பது க்ஷத்ரிய தர்மத்திற்கு புறம்பானது என்று கைகேயி எடுத்துரைத்தாள். இந்த ஒரு அரிய விஷயத்தை இந்த இடத்தில் கம்பர் மிகவும் அழகாகக் கையாண்டுள்ளார். அந்த கம்பராமாயணப் பாடல் இதுதான்.


*வெயில் முறை குலக்கதிரவன் முதலிய மேலோர்*
*உயிர்முதல் பொருள் திறம்பினும் உரை திறம்பாதோர்*
*மயில் முறைக்குலத்து உரிமையை மனுமுதல் மரபை*
*செயிர் உற, புலைச் சிந்தையால் என் சொன்னாய்? - தீயோய்!*

- மந்தரை சூழ்ச்சி படலம்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 51

ஓர் ஊரில் ஒரு இளைஞன் வஸித்து வந்தான். அவனது குடும்பம் ஏழ்மையில் வாடியது. அவன் அஹிம்ஸையை, கடைப்பிடிப்பதையே தனது வாழ்வின் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒரு கோழிப் பண்ணையில் வேலை கிடைத்தது. கோழிகளை ஹிம்ஸிக்க வேண்டிய ஒரு வேலையாக இருந்ததால், அவன் தன் வாழ்வின் குறிக்கோளாகிய அஹிம்ஸையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக, தனது குடும்பத்தின் ஏழ்மையைக் கூட பொருட்படுத்தாமல், அந்த வேலையைத் துறந்தான். பின்னர், அவனுக்கு ஒரு கசாப்புக் கடையில் வேலை கிடைத்தது. அங்கும் ஜீவ ஹிம்ஸை செய்ய வேண்டியிருந்ததால், வாழ்வின் கொள்கைக்காக அந்த வேலையையும் துறந்தான்.

வேலையைத் துறந்து, தனது வறுமை நிலையைப் பற்றி எண்ணியவாறே அவன் செல்லும் பொழுது, தெருவிலிருந்த நாய் ஒன்று அவனைத் துரத்த ஆரம்பித்தது. அவனும் ஜீவராசிகளை ஹிம்ஸிக்கக்கூடாது என்ற தனது குறிக்கோளை மனதிற்கொண்டு, நாயைக் கண்டு ஓடினான் - நாய் அவனைத் துரத்தி வந்து கடித்தது. அப்பொழுது எதிரே கசாப்புக் கடைக்காரன் வந்தான். அவனைக் கண்டதும் அந்த நாய் பயந்து ஓடிவிட்டது.



அதைக் கண்டதும், அந்த இளைஞன் மனதிற்குள், ''நான் ஜீவராசிகளுக்கு ஹிம்ஸை செய்யக் கூடாது என்பதையே குறிக்கோளாகக்கொண்டுள்ளேன். இந்த நாயோ என்னைத் துரத்தி வந்து கடிக்கிறது. ஆனால், ஜீவஹிம்ஸையைத் தன் தொழிலாகக் கொண்டுள்ள இவனைக் கண்டு நாய் பயந்து ஓடுகிறது. இது என்ன விந்தை!'' என்று நொந்து கொண்டான்.

அப்பொழுது, அவன், அந்த ஊரிலிருந்த ஒரு ஸாதுவிடம் சென்று தன் கதையைக் கூறினான். அதற்கு அந்த ஸாது ''நீ சொல்வதைக் கேட்டால் ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் கூறும் ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு ஊரில் ஒரு பாம்பு இருந்தது. அந்த ஊருக்கு ஒரு மஹாத்மா வந்தார். அப்பொழுது அந்த பாம்பு அவரிடம் தனக்கு ஏதேனும் உபதேசம் செய்யுமாறு வேண்டியது. அதற்கு அவர், ''எந்த ஒரு ஜீவனையும் கடித்துத் துன்புறுத்தாதே!'' என்று உபதேசித்தார்.

சில காலத்திற்குப் பின், அந்த மஹாத்மா மீண்டும் அந்த ஊருக்கு வந்தார். அப்பொழுது, அவர் அந்த பாம்பின் நிலையைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்த பாம்பு, உடல் நலிந்து, உயிரைவிடும் தருவாயிலிருந்தது. அந்த ஸாதுவிடம் பாம்பு, ''நீங்கள் எனக்கு செய்த உபதேசத்தை கடைப்பிடித்ததால் எனக்கு நேர்ந்த நிலைமையைப் பாருங்கள். நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்பதால் அனைவரும் என்னை அடித்து துன்புறுத்துகின்றனர்'' என்றது. அதற்கு அவர் ''நான் உன்னிடம் கடிக்காதே என்றுதானே உபதேசம் செய்தேன். யாரையும் பார்த்து சீறி அச்சுறுத்தாதே என்று கூறவில்லையே! தற்காப்புக்காக உன்னை நெருங்குபவரை சீறி அச்சுறுத்தினால்தான் நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்'' என்றார்.

அந்த ஸாது இந்தக் கதையை அந்த இளைஞனிடம் கூறி ''உயிர்களை ஹிம்ஸிக்கக் கூடாது என்பது உயர்ந்த தத்துவம்தான். அதை நடைமுறைப்படுத்தும் விஷயத்தில்தான் விவேகம் தேவை'' என்றார்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 7

**- தொடர்ச்சி**

துர்கிமாவிற்கு கீர்த்தனம் செய்து ஊதியம் பெற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்துவது பிடிக்காமல் போயிற்று. எனவே ஸ்ரீரஸிக்விஹாரி கோவிலைச் சேர்ந்த ஒரு பணக்கார மாதுவின் வீட்டில் மாதம் ஐந்து ரூபாய்க்கு வேலைக்குச் சேர்ந்து உழைத்து வரும் வருமானத்தில் தன் கோபாலனைக் கொண்டாடி வந்தாள். வரவர அவளுக்கு பஜனை செய்வதில் இருந்த தீவிரம் பெருக ஆரம்பித்ததால் வேலை செய்வது முடியாமல் போய்விட்டது. ஆச்ரமத்திலும் வசிக்க முடியவில்லை. பிறகு ரங்கஜீ மந்திரின் வெளிப் ப்ரகாரத்தில் ஒரு தனி அறையில் தனது கோபாலனுடன் குடிபெயர்ந்தாள். தனது கடைசி காலம் வரை இங்கேயே தான் வசித்தாள். எந்நேரமும் கோபாலனை வாத்ஸல்ய **பா**வத்தில் ஸேவை புரிந்து வந்தாள்.

தனது ஜீவனத்துக்காக யாரையும் யாசிக்கவில்லை. தனது ஸாதனையைப் பற்றி யாரிடமும் பேசமாட்டாள். தன்னால் முடிந்தவரை தன்னை மறைத்துக்கொண்டு வாழ்ந்தாள். யாரைக் கண்டாலும் க்ருஷ்ண தர்சனத்தையும், அக்ஷயமான ப்ருந்தாவனவாஸமும் தனக்குப் பிச்சையாகக் கேட்பாள். எப்படி மறைந்து வாழ்ந்தாலும், சில நல்ல உள்ளங்களுக்கு அவளது மகிமை புரிந்து அவளுக்கு ஏதாவது அன்புடன் தருவார்கள். அதை வைத்து அவள் கண்ணனுக்கு ஸேவை புரிந்து மகிழ்ந்தாள்.

சில ஸமயம் அவளது டாகுருக்கு 'போக்' செய்விக்க அவளிடம் எதுவும் இராது. ஏதாவது இருந்தாலும் அதை யாராவது திருடிவிடுவார்கள். அப்பொழுது அவள், ''கோபாலா! நீயே உனக்கு வேண்டியதை தேடிக்கொள்ளப்பா'' என்று கூறிவிடுவாள். சில ஸமயம் தேவைக்கு அதிகமான பணம் கிடைத்தால் கோபாலன் கண்டு களிக்க ''ராஸலீலை'' அபிநய ஏற்பாடுகள் செய்வாள். ஸந்த் ஸேவை செய்து, மிச்சம் மீதியில்லாமல் பணத்தைச் செலவு செய்து விடுவாள். கோபாலனும் தனது அன்னையான துர்கீமாவை நன்றாக

கவனித்துக்கொள்வான். அவனுக்கு எது தேவையோ அல்லது துர்கீமாவுக்கு எது அவச்யம் தேவையோ, அதை யாருக்காவது ப்ரேரணை செய்து வரவழைத்து விடுவான்.

ஒரு ஸமயம், துர்கீமாவின் தலையில் வெகு நாட்களாக எண்ணையே காணாததால் புண்கள் ஏற்பட்டிருந்தது. இதனால் அவளுக்கு தலைவலியும் ஏற்பட்டது. இதற்கு மல்லிகைப்பூத் தைலம் தடவினால் தான் தீரும். ஆனால், துர்கீமாவிடம் ஏது தைலம் வாங்கப் பணம்? துர்கீமாவின் பக்தர் ஸ்ரீகிரிதாரிலால்ஜி என்பவர் அம்ருதஸரஸில் வாழ்ந்து வந்தார். அவர் அப்போது ப்ருந்தாவன யாத்திரைக்குக் கிளம்பினார். தனது வேலையாளிடம் உடல் வலிக்குத் தடவும் கடுகு எண்ணையை வாங்கிவர அனுப்பினார். அவன் தெரியாமல் மல்லிகைப்பூத் தைலத்தை வாங்கி வர அவரும் கிளம்பும் அவசரத்தில் அதைப் பார்க்காமல் தனது மூட்டைகளுடன் எடுத்து வந்தார். பிறகு அவர் இதைக் கவனித்ததும், ''சரி இதை துர்கீமாவுக்குத் தரலாம்'' என்று நினைத்து ப்ருந்தாவனத்தை அடைந்ததும், நேரே துர்கீமாவை ஸந்தித்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அதை அவளிடம் ஸமர்ப்பித்தார். துர்கீமா, ''கிரிதரா! தைலம் வாங்கி வந்தாயா! அதை நீயே என் தலையில் தேய்த்துவிடு'' என்றாள். கிரிதர்லால் தானே மல்லிகைப்பூத் தைலத்தை அவளது தலையில் தேய்த்தார். அவர் ஆச்சர்யப்படும் விதமாக ஒரு பாட்டில் தைலத்தையும் அவளது தலை உறிஞ்சிக் கொண்டது.

துர்கீமாவும், கோபாலனும் பரஸ்பரம் ப்ரேமையில் மூழ்கித் திளைத்தனர். வாத்ஸல்யமே உருவான துர்கீமாவிற்கு, விச்வம் முழுவதும் கோபாலனின் சின்னஞ்சிறிய கோமள சரணங்கள்தான். கோபாலனைத் தவிர வேறொன்றும் அறியாதவளாக இருந்தாள்.

வயது மிக ஆனதும் தள்ளாமை சேர்ந்ததால், கோபாலனுக்கு ஸேவை செய்ய துர்கீமாவால் முடியவில்லை. ஒருநாள், ''கோபாலா! என்னால் இனி உனக்குத் தொண்டு செய்ய இயலாது. நீ எனக்கு ஸேவை செய்யடா!'' என்று கூறிவிட்டாள். பிறகென்ன! கோபாலனுக்கு ஒரே குஷிதான். துர்கீமா அவனைப் பார்த்துக்கொண்டே ஆனந்தக் கண்ணீர் பெருக்கிக்கொண்டு அமர்ந்திருப்பாள். இவன் ஓடியாடி அறையைப் பெருக்கி துப்புரவாக்கி வைப்பான்.



துர்கீமாவின் பக்தையான உஷாஜியின் அன்னை ஸ்ரீமதி ச்யாமாதேவி ஒருநாள் துர்கீமாவை தர்சனம் செய்ய வந்தாள். அவள் கேட்டாள், ''அம்மா உங்கள் அறை எப்படி இவ்வளவு அழகாக சுத்தமாக இருக்கிறது. முன்பெல்லாம் இப்படி இருக்காதே'' என்றாள். அதற்கு துர்கீமா, ''கோபாலன் தான் என்னை இப்படிப் பார்த்துக் கொள்கிறான். எனக்கு அவனை விட்டால் யாரிருக்கிறார்கள்'' என்றாள்.

கோபாலன் அன்னையை அடிக்கடி வம்புக்கும் இழுப்பான். அவனுக்கு அதில் அலாதிப் பிரியம். துர்கீமா தன் உணவுக்காக யாரையும் யாசிக்காமல் வாழ்ந்தாள் அல்லவா? ஒரு நாள் அவள், ''கோபாலா! உனக்கு ''போக்'' தர என்னிடம் ஒன்றுமில்லை. நீ யாராவது கோபியின் வீட்டில் போய் சாப்பிட்டு வா'' என்றாள். கோபாலனும், அன்று யாரோ ஒரு கோபிகையின் வீட்டை தன்யமாக்கி உணவருந்திவிட்டு வந்து வீடு திரும்பினான். வாயிலில் நெடுநேரம் நின்றான். துர்கீமா உள்ளேயே அமர்ந்து அவனை எதிர்பார்த்துக்கொண்டு கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். இதற்குள் ரங்கஜி மந்திரின் மஹந்துடைய பத்னி அங்கு வந்தாள். அறைக் கதவு தாளிட்டிருப்பதையும், கோபாலன் வெளியே தொட்டிலில் உறங்குவதையும் கண்ட அவள், கதவைத் தட்டின உடனேயே கதவு திறக்க, உள்ளே அன்னை அழுதுகொண்டே த்யானத்தில் இருப்பதைக் கண்டு அவள், ''அம்மா! ஏன் கோபாலனை வெளியே அமர்த்தி விட்டீர்கள்?'' என்று வினவினாள்.

''என்ன? அவன் வந்துவிட்டானா?'' என்று பரபரப்பாக கூவிக் கொண்டு அறைக்கு வெளியே ஓடிச் சென்று, தொட்டிலில் கிடந்த கோபாலனை வாரி எடுத்து நெஞ்சில் அணைத்துக்கொண்டாள். கோபாலனும், அன்னையும் பரஸ்பரம் ப்ரேம ஆலிங்கனத்தில் மகிழ்ந்து, அநிர்வசனீயமான நிலையை அடைந்தனர். இப்படி ஆனந்திக்க வேண்டும் என்றுதானோ கோபாலன் சாப்பிட்டுவிட்டு, உள்ளே ஸாதாரணமாக வராமல் வெளி வராந்தாவிலேயே தங்கினான்? கோபாலனுக்குதான் இதன் உண்மை தெரியும்!

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

ஒரு ஸமயம், ஒரு இளைஞர் ஒருவர் ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசிக்கச் சென்றிருந்தார். அவர், வேதம் நன்கு கற்ற, ஶ்ராஸ்த்ரோக்தமாக வாழ்ந்த ஒரு பெரியவரைக் குறிப்பிட்டு அவருடைய பேரன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்த இளைஞரோ பரம லௌகீகராக இருந்தார். துராச்சாரம் உடையவராகவும் இருந்தார். அந்த இளைஞர் பன்முறை தன்னைப் பற்றி, தனது வம்சத்தை சொல்லி, விண்ணப்பித்தும், ஸ்ரீ மஹாபெரியவாள் சிறிதும் அவரை லட்சியம் செய்யவில்லை. அந்த இளைஞர் விடாமல் சொல்லவே, ஸ்ரீ மஹாபெரியவாள் அவரைப் பார்த்து, ''பகவான், முன்பு ஒரு காலத்தில் வராஹ அவதாரம் எடுத்தார் என்பதால், இப்பொழுதிருக்கும் பன்றிகளுக்கு கௌரவம் கொடுக்க முடியுமா என்ன? ஶ்ராஸ்த்ரோக்தமான பெரியவர்களின் பரம்பரையில் வந்திருந்தோமானால், பெரியோர்களின்படி வாழ்ந்தால்தான், அந்த கௌரவத்தை நாம் பெற முடியும். இல்லாவிடில், வீணே'' என்று பதிலுரைத்தார். ஸ்ரீ மஹாபெரியவாளின் இத்தகைய பதிலைக் கேட்டதும், அந்த இளைஞர் வாயடைத்துப் போனார்.

**- பாலு**

# தீர்க்க ஆலோசனை

மஹான்களின் சொல், செயல் எல்லாம் தீர்க்கமான ஆலோசனையுடன் கூடியதாகவே இருக்கும். ஒரு ஸமயம், காஞ்சி மஹாஸ்வாமிகளை தரிசனம் செய்ய மகர ஸங்கராந்தியின்பொழுது காஞ்சிபுரம் சென்றிருந்தேன். அப்பொழுது மஹா ஸ்வாமிகள், மடத்தில், அப்பொழுதிருந்த ஒரு பாரிஜாத மரத்தின் அடியில் உட்கார்ந்து எல்லோருக்கும் தரிசனம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்த ஸமயம், மடத்து நிர்வாகி ஒருவர் பெரியவாளிடம், ஆந்திர தேசத்திலிருந்து ஒரு தந்தி வந்திருப்பதாகக் கூறினார்.

பெரியவாளும் ஜாடையினாலேயே, 'என்ன விஷயம்?' என்று வினவினார். அதற்கு அந்த நிர்வாகி, மஹாபெரியவாளிடம் உபதேஸமும், ஸந்யாஸமும் வாங்கியதாகக் கூறிக்கொண்டு ஒரு ஸ்வாமிகள் அங்கு வந்திருப்பதாகவும், அவர் தங்களிடம் உபதேசம் பெற்றவரா என்பதை உறுதிபடுத்தவே தந்தி அனுப்பியுள்ளதாகவும் கூறினார். பெரியவாளோ ஒரு புன்னகை புரிந்துவிட்டு பதிலேதும் சொல்லாமல் பேசாமல் இருந்துவிட்டார்.

சுமார் 2 மணி நேர அவகாசத்திற்குள் இது விஷயமாகவே, பல நபர்களிடமிருந்து மடத்திற்கு தந்திகள் வந்தன. ஸ்ரீமடத்து நிர்வாகியோ பெரியவாளிடம், ''மீண்டும் மீண்டும் இது விஷயமாக பல தந்திகள் வந்துவிட்டன. பெரியவாளும் ஒன்றும் சொல்லவில்லை. எனவே, இது விஷயமாக நான் என்ன செய்வது?'' என்று வினவினார். அதற்கு பெரியவரோ, ''நீ என்ன பதில் கொடுக்கலாம் என நினைக்கிறாய்?'' என்று வினவினார். மடத்து நிர்வாகியோ, ''மேற்படி நபருக்கு பெரியவாள் ஸந்யாஸமோ, மந்திர உபதேசமோ கொடுக்கவில்லை என்று அடித்துவிடட்டுமா?'' என்று மஹா பெரியவாளிடம் சொன்னார்.

''நீ இப்படி பதில் கொடுத்தால், நான் வேறு சிலருக்கு ஸந்யாஸமும், உபதேசமும் கொடுத்தது போல் அர்த்தமாகிவிடும். மேலும், இதுபோல் நாளை பல நபர்கள் கிளம்பினால் ஒவ்வொருவர் விஷயத்திலும் நாம் ஸந்தேகத்தைத் தீர்க்க வேண்டி வரும். காஞ்சி

சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு மட்டும்தான் ஸந்யாஸமும் உபதேஸமும் கொடுத்தார் என்று பதில் கொடுத்துவிடு. அவ்வாறு செய்தால், அது எல்லோருக்கும், எல்லா காலங்களுக்கும் பொருந்தும் ஒரு நிரந்தரமான பதிலாக அமையும்'' என்று புன்னகை செய்தவாறே கூறினார்.

- பெரியவாள் பக்தர் ஒருவர் சொல்லக்கேட்டு

**- ஆ. பாக்யநாதன்.**

---

நமது பாடசாலையைச் சேர்ந்த அத்யாபகரான ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களிடம் ஒருமுறை ஸ்ரீமஹாபெரியவாள், சென்னை நுங்கம்பாக்கத்தில் ஓரிடத்தில், பகவத்கீதை உபன்யாஸம் தினமும் சொல்லி வர ஆஜ்ஞாபித்தார். அதன்படியே, ஸ்ரீமல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களும் பகவத்கீதை உபன்யாஸம் செய்துவந்தார்கள். அவரது உபன்யாஸத்திற்கு மூன்று பேர்கள் மட்டுமே தொடர்ந்து வந்தார்கள். அதில் ஒருவர் வயதாகி, உடல்நலம் குன்றியவரும் கூட. அவரால் எதுவும் புரிந்துகொள்ளவும் முடியாது. நன்கு படித்தவரான ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி அவர்களுக்கு இது வேதனையாக இருந்தது. அவர் காஞ்சிபுரத்துக்கு சென்று ஸ்ரீ மஹாபெரியவாளை தரிசித்து, தனது மனக்குறையை கூறி பகவத் கீதை உபன்யாஸத்தை நிறுத்திவிடலாம் என்று நினைத்தார்.

ஸ்ரீ மஹாபெரியவாள், ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜியை பார்த்தவுடன், ''உபன்யாஸத்திற்கு எத்தனை பேர் வருகின்றனர்'' என்று வினவினார். அதற்கு ஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி ''மூவரே'' என்று கூறி, மேற்கொண்டு சொல்லும் முன், ஸ்ரீ மஹாபெரியவாளே, ''நல்லது, நல்லது. பகவான் க்ருஷ்ணனே கீதையை உபதேசிக்கும்பொழுது கூட, அர்ஜுனன் மட்டும்தான் கேட்டுக்கொண்டு இருந்தான். உங்களுக்கோ மூவர் வருகின்றனரே! ஆதலால், அவசியம் தொடர்ந்து சொல்லவும்'' என்று அருளினார்கள்.

**— ஆ. பாக்யநாதன்**

# மறக்க முடியாத நாள்

—நிர்மலாகிரி

ஸ்ரீ ரமண பகவானின் பக்தையான கனகம்மாள் அவர்கள் எழுதிய 'நினைவில் நிறைந்தவை' புத்தகத்தைப் படித்ததிலிருந்து அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற உந்துதல் எனக்கு இருந்து கொண்டே இருந்தது. நம் குருநாதர் என்னையும், நமது ஸத்ஸங்கத்தின் அன்பர்களான ஜயந்தி ஜானகிராமன், விஷ்ணுப்ரியா, ஜனனி, பூர்ணிமா, தீனதயாமயி மற்றும் கல்யாணக்ருஷ்ணன் ஆகியோரையும் திருவண்ணாமலை ரமணாஶ்ரமம் சென்று கனகம்மாளைப் பார்த்து வரச் சொன்னார்கள்.

பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி காலை நாங்கள் ஒரு van வைத்துக்கொண்டு திருவண்ணாமலை ரமணாஶ்ரமம் சென்றோம். அங்கு சென்றபின்தான், கனகம்மாள் சென்னை சென்றுள்ளார் என்பது தெரிய வந்தது. நாங்கள் ரமணாஶ்ரமம், ஸ்கந்தாஶ்ரமம், விருபாக்ஷி குகை போன்ற இடங்களையெல்லாம் தரிசனம் செய்துவிட்டு பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களின் ஆஶ்ரமம் சென்றோம். மாதேவகி அவர்கள் எங்களுடன் மிகவும் அன்புடன் அளவளாவினார். அவருடன் சேர்ந்து நாங்களும் உணவருந்தினோம். மாதேவகியுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது அவரது ஒவ்வொரு பேச்சும், ஸ்வாஸமும், அவரது குருவான பகவான் யோகி ராம்சுரத்குமாரைப் பற்றியே இருந்ததைக் கண்டு பரவசமானோம்.

யோகி ராம்சுரத்குமார் அவர்களின் பேச்சு, செயல் எல்லாம் மிகவும் குறைந்த அளவில், தேவையான அளவிலேயே இருக்கும் என்றும் சொன்னார். மேலுமவர், ''ஸாதகர்களின் ஒவ்வொரு அசைவும் ஸாதனையாக இருக்க வேண்டுமென்று கூறுவார்'' என்றார்.

ஒரு ஸமயம், அவருடன் நான் வெளியே சென்றபொழுது, கதவருகே நின்ற சில அன்பர்களைக் கண்டு அவர் சிரித்தார். நான் உடனே, ''உங்களுக்கு அவரைத் தெரியுமா?'' என்று கேட்டேன். ''தெரியாது'' என்று சிரித்துக் கொண்டே பதில் கூறினார். வாயினால்

அவ்வாறு கூறினாரே தவிர, "For Him, nobody was a stranger!" என்பதை எனக்கு உணர்த்தினார்'', என்பதையும் மாதேவகி நினைவு கூர்ந்தார்.

''எந்த பொருளானாலும், சிறிய காகித துண்டானாலும், அவைகள் எல்லாமே அவர் வைத்துள்ள இடத்திலேயே இருக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யாரும் இவைகளை ஒரு "inch' கூட அவருடைய permission இல்லாமல் நகர்த்தக்கூடாது. இங்குள்ள பொருட்களை சிறிது நகர்த்தினாலும் இப்பிரபஞ்சத்தில் பாதிப்பு ஏற்படும்! என்பார்'' என்றும் மாதேவகி கூறினார்.

யோகி ராம்சுரத்குமார் அவர்கள் இல்லாத குறையே தெரியாத வண்ணம் அவர் எங்களையெல்லாம் ப்ரேமையில் மூழ்கடித்தார். அங்கிருந்து கிளம்பும்பொழுது, ''யோகி ராம்சுரத்குமார் மிகவும் எளிமையாக இருப்பார். ஆழ்ந்த கருத்துக்களையும், மிக எளிமையான முறையில் எடுத்துரைப்பார். "Profoundity & simplicity always go together" என்று முத்தாய்ப்பு வைத்தாற்போல் கூறினார். பின்னர் நாங்கள் அங்கிருந்து கிளம்பி சென்னைக்கு கனகம்மாவைக் காண வந்தோம்.

(தொடரும்)

---

சாலையோரத்தில், எவ்வித பொருள்களும் இல்லாத நிலையில் வஸிக்கும் ஒருவன் தன்னிடம் ஓரிரு பொருள்கள் சேர்ந்தவுடன் ஒரு நாய்க்குட்டியை பாதுகாவலுக்கு வளர்க்கிறான். சில நாட்களுக்குப் பின் அவனிடம் மேலும் பொருள் சேருமானால் ஒரு குடிசை அமைத்து, கதவு வைத்து தன் பொருளை காத்துக் கொள்கிறான். வசதிகள் வளர வளர, பெரிய வீடு கட்டிக் கொள்கிறான். நவீன இயந்திர பூட்டுகள் பொருத்திக் கொள்கிறான். காவலாளிகளை வேலையில் அமர்த்திக் கொண்டும், நாய் வளர்த்தும் தனது பொருளைக் காத்துக் கொள்கிறான். அதுபோல், ஒரு மஹாத்மா, தான் ஏற்படுத்தும் ஆன்மீக ஸ்தாபனங்கள் வளர வளர, அதற்கேற்ப மேலும் மேலும் தபஸை வளர்த்துக் கொண்டால்தான் அவற்றை ரக்ஷிக்க முடியும்.

- **ஸ்ரீஸ்வாமிகள்**

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 78

*ஏமலியிற் கேடாய் நானென்னுறுதியாய்*
*நாடினின் னுறுவேன் அருணாசலா* - தொடர்ச்சி

கபீர்தாஸரும், கமாலும் இப்படியாக திருட முடிவு செய்து, ஒரு வீட்டில் இரவு கன்னம் (துவாரம்) வைத்தார்கள். அது சிறிய துவாரமாக அமைந்தது. கபீர்தாஸர் அதன் வழியாக உள்ளே செல்லவும் இயலாது. கமால் சிறுவன் என்பதால், அவனை உள்ளே அனுப்பி, ''பொருட்களை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொடு'' என்று சொல்லி உள்ளே அனுப்பினார் கபீர்தாஸர்.

கமாலும் அதுபடியே உள்ளே சென்று, சிறிது சிறிதாக பொருட்களை எடுத்துக் கொடுத்தான். பொழுது விடியும் ஸமயம் வந்தது. அதற்குமேல் தாமதிப்பது நன்மையாகாது என்ற முடிவுக்கு வந்த கபீர்தாஸர், கமாலிடம், ''பொழுது விடியப் போகிறது. ராமநவமி உத்ஸவமும் ஆரம்பிக்க வேண்டும். நீ வெளியில் வா'' என்றார்.



கமால் அந்த வீட்டினுள் நுழைந்து விட்டாலும், அதே துவாரம் வழியாக வெளியே வர இயலவில்லை. தலை வெளியில் வந்தாலும், உடம்பு மாட்டிக்கொண்டு விட்டது. முயன்றாலும் முடியவில்லை. கமால் யோசித்தான். அவன் எடுத்துக் கொடுத்த (திருடிய) நகைகள் எல்லாம் கபீர்தாஸரின் கையில் உள்ளது. அவன் வெளியில் வரவில்லை என்றால், கபீர்தாஸர் மாட்டிக்கொள்வார். அவர் அங்கே நின்று கொண்டிருப்பது ஊர் ஜனங்களுக்கு தெரிந்தால், உத்ஸவம் நின்று போகும். இப்படி எல்லாம் யோசித்த கமால், கபீர்தாஸரைப் பார்த்து, ''நீங்கள் இனிமேல் இங்கு தாமதிக்க வேண்டாம். சூரியன் சிறிது நேரத்தில் வந்துவிடும். பின்னர், ஊர்ஜனங்கள், உங்களையும், என்னையும் விசாரிப்பர். ராமநவமி உத்ஸவமும் நின்று போகும். ஆதலால், நீங்கள் என் தலையை அறுத்துக்கொண்டு போய் விடுங்கள். தலையில்லாத முண்டத்தை வைத்துக்கொண்டு, அடையாளம் கண்டுகொள்வது எளிதல்ல. அப்படியே கண்டு பிடிப்பதற்கும் 3, 4 நாட்களாகும். அதற்குள் உத்ஸவம் முடிந்துவிடும். அப்புறம், பார்த்துக் கொள்ளலாம். நீங்கள் உத்ஸவத்தை நடத்தச் செல்லுங்கள்'' என்று சொன்னான்.

அவரும் மகனென்றும் பாராமல், கமாலின் தலையை அறுத்து எடுத்துக்கொண்டு போய்விட்டார். ஸ்ரீராமநவமி உத்ஸவம் விமரிசையாக நடந்துகொண்டிருந்தது. இன்னார் வீட்டில் திருடு போயுள்ளது என்பதை அறிந்த ராஜா, திருடியது யார் என்று கண்டு பிடிப்பதற்காக, அந்த தலையில்லாத கமாலின் முண்டத்தை ஒரு மரத்தில் தொங்கவிட்டான். அந்த ராஜாவின் எண்ணம் என்னவென்றால், ''இந்த முண்டத்தை சொந்தம் கொண்டாட யாராவது வருவர். அதை வைத்து, யார் திருடியது என்று கண்டுபிடித்து விடலாம்'' என்று முடிவு செய்தான். பக்கத்தில் சோதனைக்கு என்று ஆட்களை எல்லாம் போடவும் செய்தான்.

இப்படி இருக்கும் ஸமயத்தில், கபீர்தாஸர், ஸ்ரீராமநவமி உத்ஸவத்தில் ராமரை புறப்பாடு செய்து, அந்த முண்டமிருக்கும் தெரு வழியாகச் செல்கிறார். பாகவதர்களோடு கபீர்தாஸர் ஆனந்தமாக நாமஸங்கீர்த்தனம் செய்தபடி வருகிறார். அப்படி நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டுவந்த பாகவத கோஷ்டி, கமாலின் முண்டத்தை

நெருங்கியபொழுது, கமாலின் கை, அதிசயமாக, கரத்தாளம் போட்டதாம். தலையில்லாத முண்டத்திலிருந்துதான் கரத்தாளம் வந்ததாம். ஸஹஸ்ராரம்தான் ஆத்மஸ்தானம் என்றால், தலையில்லாத முண்டம் எப்படி கரத்தாளம் போட முடியும்? ஆத்மஸ்தானம் ஹ்ருதயமானபடியால்தான், இது சாத்தியமானது.

(தொடரும்)

# செய்திகள்

**டிசம்பர் 20-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை**

ஸ்ரீ ஸ்வாமிகள், பெங்களூரில் பல இடங்களில் தினமும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை ''பக்த விஜயம்'' உபன்யாஸம் செய்தார்கள். 20, 21 தேதிகளில் விஜயநகரிலும் 22, 23 தேதிகள் R.T. நகரிலும் 24, 25, 26 தேதிகளில் ஆஸ்திக ஸமாஜம், மல்லேஶ்வரத்திலும் உபன்யாஸம் செய்தார்கள்.

**டிசம்பர் 27-ந் தேதி**

ஸ்ரீ ஸ்வாமிகள், பெங்களூர் ஸ்ரீ பிரதீப் ஜானகிராமன் இல்லத்தில் நடைபெற்ற ராதா கல்யாண உத்ஸவத்தில் கலந்துகொண்டார்கள்.

**பிப்ரவரி 18-ந் தேதி முதல்**

மதுரபுரியில் ஸ்ரீ கல்யாணநிவாஸ பெருமாளுக்கு மண்டலாபிஷேகம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. விவரங்களுக்கு பம்மல் ஸ்ரீ பாலாஜி அவர்களை 04111-374183 அல்லது 954111374183 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**ஏப்ரல் 9-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை**

ஸ்ரீ ப்ருந்தாவனத்தில், ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் பாகவத பாராயணம் நடைபெற இருக்கின்றது.

**மங்களானி பவந்து.**